DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 22 /2024**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | காளியம்மாள் | Father Name – | முருகன் |
| Age | 55 | Village – | ஜக்கமநாயக்கன்பட்டி |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.06.2026.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. வழக்குரை விபரங்களை எனது வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் நானும் எனது மகனும் சொன்னோம். பிரதிவாதி சண்முகம் எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது கிரைய ஆவணத்தில் இல்லாத உரிமையை கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் நான் குடியிருக்கும் வீடு சுமார் 45 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காலம்மாள் தனது மகள் சரஸ்வதிக்கு 07.07.2008 ம் தேதி தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் கொடுத்த சொத்தை தான் நான் வழக்குரை சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எனதுதரப்பில் வா.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.8 ஆவணத்தில் வழக்குரை சொத்தில் 400 சதுரடியில் வீடு உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு திசையில் உள்ள சுவர்கள் சொந்தச்சுவர் என்றும், தெற்கு பக்க சுவர் பொதுச்சுவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்க சுவற்றை தாண்டி தான் பிரதிவாதி சண்முகத்தின் வீடு உள்ளது என்றால் சரிதான், பிரதிவாதி சண்முகம் என்னுடைய இடத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார். மேற்கு பக்க சொந்த சுவற்றை தாண்டி இடம் இருப்பதாக வா.சா.ஆ.8 ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தில் எனது வீட்டின் மேற்குபுற சுவற்றை தாண்டி எனக்கு நிலம் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றும், நான் எனது மூல ஆவணத்திற்கு மாற்றமாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.8 ஆவணத்தில் மேற்கு புற சுவற்றை பராமரிப்பதற்கு மேற்கு புற சுவற்றை தாண்டி உரிமை இருப்பதாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் மேற்கு பக்கம் சொந்தச்சுவற்றை தாண்டி எனக்கு உரிமை இருப்பதாக காட்டக்கூடிய எந்த சரத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 2 லக்க சொத்துக்கள் எதுவும் காட்டப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் மேற்கு நான்குமாலாக பெருமாள் வாடன் மனை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பெருமாள் வாடன் என்பவர் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான்.

4. சரஸ்வதிக்கு வா.சா.ஆ.8 ஆவணத்தை எழுதி கொடுத்த காளம்மாளுக்கு 29.05.1995ம்தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் வழக்குரை சொத்து பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 29.05.1995ம் தேதிய கிரைய ஆவணத்தில் காளம்மாளுக்கு மேற்குபுற சுவற்றை தாண்டி எந்த உரிமையும் வழங்கப்படவில்லை என்பதை நன்கு அறிந்து கொண்டு அந்த ஆவணத்தை பற்றி தெரியாது என சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை 04.03.2022ம் தேதி கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் வா.சா.ஆ.8 மூலம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் கொடுப்பதாக சரஸ்வதியம்மாள் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த வா.சா.ஆ.2 ஆவணத்தில் 200 சதுரடியில் மட்டும் வீடு கட்டப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. எனது கிரைய ஆவணத்தில் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு சொந்தச்சுவர் பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் மேற்கு பக்க சுவற்றை தாண்டி எனக்கு இடம் இருப்பதாக எந்த சரத்துக்களும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கு பக்க சுவற்றை தாண்டி எனக்கு இடம் இருப்பதாக எந்த வாசகங்களும் எனது கிரைய பத்திரத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது கிரைய பத்திரத்தில் மேற்கு புற சுவற்றை பராமரிப்பதற்கு மேற்கு புற சுவற்றை தாண்டி எனக்கு இடம் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கிரைய ஆவணத்தில் மேற்குபுற சுவற்றைத் தாண்டி எந்த உரிமையும் கொடுக்கப்படாத நிலையில் எனது உரிமைக்கு மாற்றாக இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் 2 லக்க சொத்துக்கள் கிரையம் பெற்றதாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன்.

6. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் 1 லக்க சொத்துதான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், 2வது லக்க சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்தை நீதிமன்ற ஆணையர் ஆய்வு செய்தாரா என்றால் ஆய்வு செய்தார். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் BCH என்ற பகுதியை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை தவறானது என்று எனது தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் அறிக்கை தவறானது என்று நான் சொல்கிறேன் என்றால் சரிதான்.

7. பிரதிவாதி மீது நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்பதை நிரூபணம்செய்ய நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 924.38 சதுரடியில் உள்ள நிலத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதில் 200 சதுரடியில் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியுள்ள பகுதியில் 4ல் 3 பகுதி காலியிடமாக தான் உள்ளது என்றால் சரிதான். 200 சதுரடி வீடானது எனது மொத்த கிரைய சொத்தில் எந்த பகுதியில் அமைந்துள்ளது என்ற விபரத்தை எனது வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 924.38 சதுரடியில் 200 சதுரடியில் மட்டுமே வீடு உள்ளதாலும் அதனை சுற்றி காலியிடம் உள்ளதாலும் தான் மேற்குபுற சுவற்றை பராமரிப்பதற்கு இடம் விடப்பட்டுள்ளதாக என்னுடைய கிரைய பத்திரத்தில் சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது ஆவணத்தில் இல்லாத உரிமையை கோரி நான் பொய்யாக வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டி முடித்த பின்பு தான் இந்த வழக்கை தாக்கல்செய்தேன் என்றால் சரியல்ல, வீடு கட்டி கொண்டிருக்கும்போதே இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

8. பிரதிவாதியின் தந்தை பெருமாள் வாடன் 14.05.1959ம் தேதிய கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்ற சொத்தை தான் பிரதிவாதி தற்போது அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை பெருமாள் வாடன் ஆவணத்தில் கிழக்கு பக்க சுவர் பொதுச்சுவர் என உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எனது பத்திரத்தில் எனது மேற்கு பக்க சுவர் சொந்தச்சுவர் என்று உள்ளது என பிரச்சனை செய்ததால் பிரதிவாதி அவருடைய நிலத்தில் அவர் செலவில் சொந்தசுவர் எழுப்பிவிட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து கட்டியதாக சொல்லியுள்ளது தவறானது என்றால் சரியல்ல, பிரதிவாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனது கிரைய ஆவணத்தில் மேற்கு பக்கசுவற்றை தாண்டி எனக்கு எந்த உரிமையும்

வழங்கப்படாத நிலையில் பிரதிவாதியின் நிலத்தை பொறுத்து வீண் பிரச்சனை செய்ய வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த சரஸ்வதியம்மாளை எனது தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது கிரைய ஆவணத்தில் இல்லாத உரிமையை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தியதால் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.06.22 16:00:30 +0530

District Munsif,
Bodinayakanur.